



கோலம், கிராமத்துப் பெண்ணின் விடிகாலை வைபவம். அன்றாட ஓவிய நிகழ்வு. எத்தனையோ கவலைகளோடும், வேலை பளுவோடும் கண் விழித்தாலும் கூட, வாசல் தெளித்து கோலம் போட்டுத் தான் தனது நாளை வரவேற்கிறாள் அவள்.

கிராமத்து வறுமை, பாரம்பரியக் கலையான கோலத்தின் ஒரு கோட்டைக் கூட அழிக்க முடியவில்லை. வாழ்க்கையின் அவலம் தொட முடியாத தூரத்தில் இருக்கிறது கோலம் எனும் தமிழ்க்கலை.





பொங்கல் போன்ற திருவிழாக்கள் வந்துவிட்டால் போதும், மனசிலிருக்கும் மகிழ்ச்சியெல்லாம் பெண்களின் மெல்லிய விரல் நுனிகளிலிருந்து கோலக்கோடுகளாய்த் துளிர்க்கத் தொடங்கி விடுகின்றன.

கோலங்களைப் பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். புள்ளிக்கோலம், கோட்டுக்கோலம்.

கோட்டுக் கோலங்களும் அடிப் படைப் புள்ளிகளில்தான் தீர்மானிக்கப் படுகின்றன. ஆனால், இந்தக் கோட்டுக் கோலங்கள் பெரும்பாலும் உருவங் களை உருவாக்கும் ஆசை கொண் டவை. விழா நாள்களில் வாசலை அலங்கரிக்கிற மாவிலைகள் மாவிலைத் தோரணங்களாக வடிவெடுக்கின்றன. திருவிழாக்களின் முக்கியமான தேர், தமிழர்களின் கோலமாக நிமிர்ந்து நிற்கிறது.

இத்தகைய வடிவங்கள் பெரும்பாலும் இலை, தளிர், பூ, கனி என்று இயற்கை





யோடு இயைந்தவைகளாகவே அமை கின்றன. காரணம், தமிழ்ச்சமூகம் இன்னமும் அடிப்படையில் விவ சாயம் சார்ந்த சமூகமாக இருப்பதுதான்.

புள்ளிகளை எண்கள் ரீதியாகக் கணக்கிட்டு கோலங்களை வரை கிறபோது எண்கணித ரீதியான அறிவு பரவலாக்கப்படுகிறது. மண் தரைப் பரப்பில் பசுவின் சாணம் தெளிக்கையில் அந்த மண்ணின் தூசு அடங்கிப் போகிறது. அடர்த்தி யான பச்சை நிறம் கொண்ட ஒரு ஓவியப் பரப்பு உண்டாக்கப்பட்டு விடுகிறது. இந்த அழுத்தமான பச்சை நிறத்தை Yellow Ochse என்று சொல்வார்கள், இன்றைய ஓவியர் கள். அரிசி மாவினால் அல்லது சுண்ணாம்புத் தூளினால் தயாரிக்கப் பட்ட வெள்ளை நிறக்கோடுகள், பச்சைப் பரப்பில் வந்து அமைகிற போது மனதிற்கு அமைதி கொடுக் கும் ஒரு வண்ண ஒத்திசைவு வந்து அமைந்துவிடுகிறது.

கிராமத்துத் தெருக்களில் வாசல் தோறும் கோலமிட்டு, ஒவ்வொரு கோலத்தின் நடுவிலும் சாணத்தின் உருண்டையில் பளிச்சென்று ஒரு பூசணிப்பூ வைக்கப்படுகிற போது இந்தக் கிராமத்து ஆத்மாக்களின் வண்ணங்கள் குறித்த தேர்ந்த அறிவு தெரிய வருகிறது.

நேர்புள்ளிக் கோலம், சந்து புள்ளிக் கோலம், இடுக்குப்புள்ளிக் கோலம், ஊடுபுள்ளிக் கோலம் என்று புள்ளிக் கோலங்களை வகை பிரித்து பேசுகிறார்கள். நேர்புள்ளிக் கோலத்தில் புள்ளிகள் ஒரே வரிசை யானவை. சந்துபுள்ளிக் கோலத்தில் அருகருகே இருக்கும் இரண்டு புள்ளிகளுக்கு இடையே இருக்கும் இடைவெளியில் - இதுதான் சந்து - ஒரு புள்ளி வைக்கப்படுகிறது.

இப்படிப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு எண்ணற்ற அலங்கார வடிவங்கள் அந்தக் கோலத்தை உருவாக்குபவரின் கற்பனைத் திறனுக்கேற்றவாறு வடிவமைக்கப்படுகின்றன.

புள்ளிகளின் தொகுப்பே கோடு என்பதைப் புரிந்து கொண்டவர்கள் தமிழர்கள். இதனால்தான் புள்ளியை வைத்து பிறகு அதைச் சுற்றிக் கோடுகளை உண்டாக்குகிறார்கள். இந்தக் கோடுகளின் தன்மையைப் பொறுத்தும் கோலங்களை வகைப் படுத்துவதுண்டு - கம்பிக்கோலம், இசைக்கோலம் என்று.

கோடு, கம்பியைப் போன்று நேர்க் கோட்டுத் தன்மையும், இறுக்கமும் கொண்டிருந்தால் அது கம்பிக்கோலம். கோலத்தின் கோடு இசைலயமாகத் தங்குதடையின்றி இசையின் அலைகள் போலத் தளர்வாக அமைகிற போது அது இசைக்கோலமாகிறது. தீர்க்கமாக வரையறுக்கப்படும் இந்தக் கோடுகள் தரைப்பரப்பை வட்டங்களாகவும், சதுரங்களாகவும் வரையறுத்து புதிய மகிழ்ச்சியை நம் நெஞ்சில் கொண்டு வந்து நிறைக்கின்றன.

குஜராத்தாக இருந்தாலும், ராஜஸ்தானாக இருந்தாலும் கோலம் போன்ற நாட்டுப்புறக் கலைகளை பேணிக்காப்பது பெண்கள்தான். தமிழகத்தில் இன்றும் கோலக்கலை வாழ்கிறது என்று சொன்னால் விரல் வழியே வழியும் அரிசி மாவினால் தங்கள் வாயில்களை அலங்கரிக்கும் பெண்கள்தான் காரணம்.

கோலத்துக்குத் தொடக்கமும் இல்லை. முடிவும் இல்லை. இதேதான் கோலக் கலைக்கும். முதல் கோலத்தைப் போட்ட தமிழச்சி யார்? கோலக் கலைக்கும் முடிவு கிடையாது. அது என்றென்றும் வாழும்.

-இந்திரன்